செ.வெ.எண்.77 நாள்.28.04.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் வறட்சி மற்றும் பேரிடர் நிவாரண திட்டத்தில் 227 பணிகள் ரூ.629.08 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது.

பேரூராட்சிகளில் 2016-17-ம் ஆண்டி ல் 11293 பணிகள் ரூ.102.12 கோடி மதிப்பிலான பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய பணிகள் மற்றும் பேரூராட்சிகள் வளர்ச்சிப் பணிகளை செய்தியாளர்களுடன் சென்று ஆய்வு மேற்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

--------

திருநெல்வேலி மாவட்டத்தில் குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் நடைபெற்று வரும் வளர்ச்சிப் பணிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சிப் பணிகள் குறித்து பார்வையிட மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் மு.கருணாகரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று (28.04.2017) செய்தியாளர் பயணம் மேற்கொள்ளப்பட்டது.

திருநெல்வேலி மாவட்டம் சுத்தமல்லியில் தாமிரபரணி ஆற்றில் குடிநீர் வடிகால் வாரியம் பராமரிப்புக் கோட்டத்தின் மூலம் புதிதாக அமைக்கப்பட்டுள்ள குடிநீர் கிணறு (சம்ப்) மேலக்கல்லூர் தாமிரபரணி ஆற்றுப்பகுதியில், மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஒன்றியத்தை சார்ந்த 170 ஊரக குடியிருப்புக்கான கூட்டுக் குடிநீர் திட்டப்பணிகள், முக்கூடல் பேரூராட்சி பேரூந்து நிலையத்தில் ரூ.90 இலட்சம் மதிப்பில் கான்கிரீட் தளம் அமைக்கும் பணிகள், சேரன்மகாதேவி அனைவருக்கும் வீடு திட்டத்தில் ரூ.2.10 இலட்சம் மதிப்பில் கட்டப்பட்டுள்ள வீடுகள் ஆகியவைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களுடன் சென்று பார்வையிட்டார்.

தொடர்ந்து அம்பாசமுத்திரம் கோடாரங்குளம் குளம் கிராமம் அருகில் கடையம், பாப்பாக்குடி கீழப்பாவூர் ஒன்றியத்தில் உள்ள 163 கிராமங்களுக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்தில் குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் கட்டுமான பணிகளையும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பார்வையிட்டார். இப்பணிகள் அனைத்தையும் விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர வேண்டுமென உத்தரவிட்டார்.

பின்னர் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

திருநெல்வேலி மாவட்டத்தில் பேரூராட்சிகளின் வளர்ச்சிப் பணிகள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செய்யப்பட்டு வரும் பணிகள் பார்வையிடப்பட்டது. திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள 36 பேரூராட்சிகளில் 2016-2017-ம் ஆண்டில் தமிழ்நாடு நகர்புற சாலைகள் அபிவிருத்தி திட்டத்தில் 15 பணிகள் ரூ.13.80 கோடியில் முடிக்கப்பட்டுள்ளது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ரூ.11.32 கோடி மதிப்பில் 9427 தனி நபர் இல்ல கழிப்பிடம் கட்டும் பணிகளில் 7859 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. சமுதாய கழிப்பிடங்கள் 52 எண்ணிக்கையில் ரூ.2.44 கோடி மதிப்பில் கட்டும் பணிகள் நடைபெற்று வருகிறது. வறட்சி நிவாரணம் பொது நிதியில் 24 பணிகள் ரூ.1.67 கோடி மதிப்பில் முடிக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் வீடு திட்டத்தில் 1739 வீடுகள் ரூ.54.78 கோடியில் பணி உத்தரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் பல்வேறு திட்டங்களையும் சேர்த்து பேரூராட்சிகளில் 2016-2017-ம் ஆண்டில் 11293 பணிகள் 102.12 கோடி மதிப்பிலான பணிகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகிறது.

குடிநீர் வடிகால் வாரியம் நகரக் கோட்டத்தின் மூலம் மானூர் மற்றும் பாளையங்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தை சார்ந்த 170 ஊரக குடியிருப்புகளுக்கு ரூ.32.40 கோடி செலவில் தாமிரபரணி ஆற்றில் மேலக்கல்லூர் பகுதியில் உறிஞ்சு கிணறு அமைத்து நீர் சேகரித்து 31 தரைமட்டத் தொட்டிகள் 31 மேல்நிலைத்தொட்டிகள் அமைத்து 135570 மக்களுக்கு குடி நீர் வழங்கும் திட்டத்தில் பணிகள் நடைபெற்று வருகிறத. ஜூன் 2017 பணிகள் முடிக்கப்படும். மேலும் கடையம், பாப்பாக்குடி, கீழப்பாவூர் ஒன்றியத்திற்குட்பட்ட 163 கிராமங்கள் மற்றும் கீழப்பாவூர் பேரூராட்சிக்கான கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கு ரூ.46.55

கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு 181356 மக்கள் தொகை பயன்பெறும் வகையில் அம்பாசமுத்திரம் வட்டம் தாமிரபரணி நதியுண்ணி அணை கட்டு அருகில் கோடாரங்குளம் கிராமத்திற்கு அருகில் நீர் எடுக்கும் அமைப்பு பணிகளும், சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் அனைத்தும் இரண்டு மாதங்களில் முடிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் திருநெல்வேலி பராமரிப்புக் கோட்டத்தின் மூலம் புணரமைப்புத்திட்டத்தின் மூலம் 20 பணிகள் ரூ.184.20 இலட்சத்திலும், பேரிடர் நிவாரண திட்டத்தில் 59 பணிகள் 332.93 இலட்சத்திலும் வறட்சி நிவாரண திட்டத்தின்கீழ் பணிகள் 148 பணிகள் ரூ.111.95 இலட்சத்திலும் என மொத்தம் 227 பணிகள் 629.08 இலட்சம் மதிப்பில் செய்து முடிக்கப்பட்டுள்ளது. திருநெல்வேலி மாவட்டத்தில் குடிநீர் தட்டுப்பாடு ஏற்படாத வகையிலும், புதிய குடிநீர் திட்டப்பணிகளும் சிறப்பாக செய்யப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

இந்த ஆய்வின் போது சேரன்மகாதேவி சார் ஆட்சியர் திரு.விஷ்ணு, இ,ஆ.ப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர்கள் (நகரம்) திரு. நாராயணன், (பராமரிப்பு)திரு. பாலசுப்பிரமணியம், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்(மு.கூபொ.) திரு.வெ.சீனிவாசன், பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திரு.மாகின் அபுபக்கர், பேரூராட்சி உதவி செயற்பொறியாளர் திரு. ஜோதி முருகன், திரு. வாசுதேவன், குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர்கள் திரு.சுப்பிரமணியம், திரு. முகமது அலி ஜின்னா ஆகியோர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.